வேலையிட காய இழப்பீடு சட்டம்

# வேலையிட காய இழப்பீட்டின் பயன்கள் மற்றும் கோரிக்கை செயல்முறை பற்றிய வழிகாட்டி



WSHCOUNCIL

MINISTRY OF MANPOWER

# முன்னுரை



இந்தக் கையேடு, 1 ஏப்ரல் 2008 முதல் தொழிலாளர் இழப்பீடு சட்டத்துக்கு பதிலாக வந்துள்ள வேலையிட காய இழப்பீடு சட்டத்துக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும்.

காயமடைந்த தொழிலாளர்களின் நலனை தொடர்ந்து பாதுகாப்பதையும், இழப்பீட்டை கொடுக்காமல் அல்லது கொடுப்பதை தாமதப்படுத்தும் பொறுப்பில்லாத முதலாளிகளை தடுப்பதையும் உறுதி செய்வதற்காக இந்தச் சட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதே வேளையில், மோசடி இழப்பீடுகளை செய்கின்ற தொழிலாளர்களுக்கு எதிராக முதலாளிகளை பாதுகாப்பதற்காகவும் இது உள்ளது.

மேலும் அதிகமான தொழிலாளர்களின் நலனை பாதுகாத்தல், இழப்பீட்டின் அளவுகளை புதுப்பித்தல் மற்றும் இழப்பீடு பெறும் முறையை ஆற்றல் மிக்கதாகவும் செயல்திறன் உள்ளதாகவும் செய்வதை இந்தச் சட்டத்தின் முக்கிய மாற்றங்கள் உள்ளடக்கியுள்ளன.

வேலையிட காய இழப்பீடு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு பயன்களையும் இழப்பீடு செய்வதற்கான வழிமுறைகளையும் இந்த வழிகாட்டி காட்டுகிறது. இந்த வழிகாட்டிக்கு எந்தவித சட்ட அடிப்படையும் கிடையாது. ஆகவே வேலையிட காய இழப்பீடு சட்டத்துக்கு முழுமை பெற்ற மேற்கோளாக இதனை எடுத்துக்கொள்ளக்கூடாது.

# உள்ளடக்கம்




02 **வேலையிட காய இழப்பீடு சட்டத்தைப் பற்றிய மேற்பார்வை**

02 வேலையிட காய இழப்பீடு கோருவதற்கு யார் தகுதி பெறுகிறார்கள்?

02 வேலையிட காய இழப்பீடு கோருவதற்கு யார் தகுதி பெறமாட்டார்கள்?

03 வேலையிட காய இழப்பீடு எப்பொழுது கொடுக்கப்படும்?

03 இழப்பீட்டின் பயன்கள் யாவை?

05 வேலையிட காய இழப்பீட்டு காப்புறுதி கட்டாயமா?

06 யார், எப்பொழுது மற்றும் எவ்வாறு ஒரு விபத்தைப் பற்றி புகார் செய்வது?

06 வேலையிட காய இழப்பீடு கோருவதற்கு சட்ட பிரதிநிதித்துவம் தேவையா?

07 **வேலையிட காய இழப்பீடு கோருவதற்கான வழிமுறை**

07 **படி** 1 - ஒரு விபத்தைப் பற்றி புகார் செய்தல்

07 **படி** 2 - வேலையிட காய இழப்பீடு கோரிக்கைக்கான ஆவனங்களை சமர்ப்பித்தல்

07 **படி** 3 - மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுதல்

08 **படி** 4 - பெறவேண்டிய இழப்பீட்டை மதிப்பிடுதல்

09 **படி** 5 - வலேயைிட காய இழப்பீடூ பறெுவதற்கூ விண்ணப்பித்தல்

10 **படி** 6 - வேலையிட காய இழப்பீடு பெறுவதற்கு விண்ணப்பித்தல்

11 வேலையிட காய இழப்பீட்டு வழிமுறை பற்றிய வரைபடம்

12 குற்றங்கள் மற்றும் தண்டனைகள்

13 பின் இணைப்பு: பட்டியல் 1 - பெருக்குவதற்கான கூறுகளின் பட்டியல்

# வேலையிட காய இழப்பீடு சட்டத்தைப் பற்றிய மேற்பார்வை



இந்த வேலையிட காய இழப்பீடு சட்டம், பொதுச் சட்டத்தின்கீழ் இழப்பீடுகளை கோருவதற்கு சுலபமான, சிக்கனமான மாற்று வழிமுறையை வழிவகுக்கிறது. பொது கோரிக்கைகளுக்கு இருப்பதை போல் இல்லாமல், இந்தச் சட்டத்தின்கீழ் யாருடைய தவறாக இருப்பினும் வேலையினால் அல்லது வேலையின் போது எழுகின்ற விபத்துக்களினால் காயம் அனுபவித்திருந்தால் பொதுவாக இழப்பீடு கொடுக்கப்படுகிறது. அதற்கு மாற்றாக, இந்தச் சட்டத்தின்கீழ் கிடைக்கின்ற இழப்பீடு முடக்கிவிடப்படும். ஒருவர் இந்தச் சட்டத்தின்கீழ் தனது இழப்பீட்டை பெறுவதென்று முடிவுசெய்து விட்டால், அவர் பொது சட்டத்தின்கீழ் தனது முதலாளி மீது வழக்கு தொடுக்க முடியாது.

## வேலையிட காய இழப்பீடு கோருவதற்கு யார் தகுதி பெறுகிறார்கள்?

வேலை தொடர்பான விபத்தில் தொழிலாளர்களுக்கு காயங்கள் அல்லது மரணம் ஏற்பட்டால், வேலையிட காய இழப்பீடு கோருவதற்கான உரிமையைப் பெறுகிறார்கள். வேலையின் காரணமாக தொழிலாளர்களுக்கு வேலை சம்பந்தமான நோய்கள் ஏற்பட்டாலும், இந்தச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரலாம்.

இந்த வேலையிட காய இழப்பீடு சட்டம் பொதுவாக சேவை ஒப்பந்த அடிப்படையில் அல்லது வேலை பழகுவதற்கான அடிப்படையில் இருக்கின்ற எல்லா தொழிலாளர்களையும் பாதுகாக்கும். இது அவர்களுடைய வருமானத்தின் அளவை பொறுத்திருக்காது.

## வேலையிட காய இழப்பீடு கோருவதற்கு யார் தகுதி பெறமாட்டார்கள்?

சொந்த வேலை செய்பவர்கள், தனிப்பட்ட குத்தகையாளர்கள், வீட்டு வேலை செய்பவர்கள், சிங்கப்பூர் ராணுவப்படை, சிங்கப்பூர் காவல்துறை, சிங்கப்பூர் குடிமை தற்காப்புப் படை, மத்திய போதைப்பொருள் துறை மற்றும் சிங்கப்பூர் சிறைச்சாலை சேவை ஆகியவற்றில் வேலை செய்பவர்களுக்கு இந்த வேலையிட காய இழப்பீடு சட்டம் பாதுகாப்பு <u>வழங்காது.</u>

## வேலையிட காய இழப்பீடு எப்பொழுது கொடுக்கப்படும்?

வேலையின் காரணமாக அல்லது வேலையின்போது ஒரு தொழிலாளிக்கு காயம் ஏற்பட்டால் இழப்பீடு கொடுக்கப்படும். வேலை செய்கின்ற போது ஒரு தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டால் (உதாரணத்துக்கு வேலை செய்கின்ற நேரத்தில் அல்லது தொழில் சம்பந்தமான கடமையில் ஈடுபட்டிருக்கும் போது), அது நடக்கவில்லை என நிரூபிக்கப்பட்டாலே ஒழிய, அது வேலையின் காரணமாக எழுந்ததாகவே கருதப்படும்.

கீழ்வரும் சூழ்நிலைகளிலும் இழப்பீடு கொடுக்கப்படும்:

- வேலையிடத்துக்கு அல்லது வேலையிடத்திலிருந்து பயணிக்கின்ற பொழுது, முதலாளியின் சார்பாக வாகனத்தை செலுத்தும் பொழுதோ அல்லது சக பயணியாக பயணம் செய்கின்ற பொழுதோ ஒரு தொழிலாளி விபத்துக்குள்ளாவது. இந்த வாகனம் ஒரு பொது போக்குவரத்து வாகனமாக இருக்கக்கூடாது.

- சிங்கப்பூரில் வசித்துக் கொண்டு அங்குள்ள ஒரு முதலாளிக்கு வேலை செய்கின்ற ஒரு தொழிலாளி, சிங்கப்பூருக்கு வெளியே வேலை செய்ய வேண்டிய வேளையில் விபத்துக்கு உள்ளானால்.

## இழப்பீட்டின் பயன்கள் யாவை?

**(இந்தப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீட்டின் பயன்கள் 1 ஏப்ரல் 2008 அன்று அல்லது அதற்கு பிறகு ஏற்பட்ட விபத்துக்களுக்கு பொருந்தும். 1 ஏப்ரல் 2008 க்கு முன்பு ஏற்பட்ட விபத்துக்களுக்கு முன்பிருந்த தொழிலாளர் இழப்பீடு சட்டத்துக்கு கீழ் உள்ள இழப்பீட்டு பயன்கள் ஏற்புடையதாக இருக்கும்).**

இந்தச் சட்டத்துக்குகீழ், காயம் அடைந்த ஒரு தொழிலாளி தேவையேற்பட்டால் மருத்துவ விடுப்புக்கான சம்பளம், மருத்துவச் செலவுகள் மற்றும் நிரந்தர இயலாமை அல்லது மரணத்துக்கு இழப்பீடு கோரலாம். முதலாளிகள், கீழ்கண்டவாறு வேலையிட காய இழப்பீட்டை கொடுக்க வேண்டும்:

### மருத்துவச் செலவுகள்

- விபத்து நடந்த தேதியிலிருந்து ஒரு வருடத்துக்கு ஏற்படும் மருத்துவச் செலவுகள், அல்லது அதிகபட்சமாக $25,000 வரையில். இதில் எது முதலில் வருகிறதோ அதைப் பொறுத்துள்ளது.

- இந்த வரையறைக்குள், சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு மருத்துவமனையில் ஏற்படுகின்ற எல்லா மருத்துவச் செலவுகளுக்கும் முதலாளிகள் பொறுப்பேற்க வேண்டும். இந்த மருத்துவச் செலவுகளுக்கு முதலாளிகள் நேரடியாக மருத்துவமனைக்கு பணம் செலுத்த வேண்டும்.

**இந்த சட்டத்தின்கீழ் இழப்பீட்டுக்கு கோரிக்கை விடுக்கும் முறையை தொழிலாளிகள் தேர்ந்தெடுத்திருந்தால், இந்த வரையறைக்கு மீறிய மருத்துவச் செலவுகளை முதலாளிகள் ஏற்க வேண்டும். இதற்கு மாறாக, முழு மருத்துவச் செலவையும் தொழிலாளிகள் பெற விரும்பினால், பொது நீதிமன்றத்தில் நஷ்ட ஈடு கோரலாம். இவ்வாறு செய்தால், மனிதவள அமைச்சுக்கு (MOM) அவர்கள் வேலையிட காய இழப்பீட்டுக்கு விண்ணப்பிக்க கூடாது.**

- மருத்துவச் செலவுகள் இவற்றை உள்ளடக்கி இருக்கும்: மருத்துவ ஆலோசனைக்கான கட்டணம், சிகிச்சை மற்றும் செலவுகள், மருத்துவ அறிக்கைக்கான கட்டணங்கள் (தொழிலாளி அனுபவித்த காயத்தின் அளவை பரிசீலிப்பதற்கான முதல் பரிசோதனை), மற்றும் மருந்துகளுக்கான செலவுகள், செயற்கை கை அல்லது கால்கள் மற்றும் மருத்துவரால் அங்கீகரிக்கப்பட்ட அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள்.

<u>மருத்துவ விடுப்புக்கான சம்பளம்</u>

- இது இவற்றை உள்ளடக்கி இருக்கும் (அ) வெளி நோயாளிக்கான மருத்துவ விடுப்புக்கு 14 நாட்கள் வரையிலான முழுச் சம்பளம்; மற்றும் (ஆ) மருத்துவமனையில் தங்க வைத்ததற்காக 60 நாட்கள் வரையிலான முழுச் சம்பளம்.

- மேலே குறிப்பிடப்பட்ட கால வரையறைக்கு மேற்பட்டு, விபத்து நடந்த தேதியிலிருந்து அதிகபட்சமாக ஒரு வருடம் வரைக்கும் 2/3 சம்பளம் கொடுக்கப்படும். பொது விடுமுறைகள், ஓய்வு நாட்கள் மற்றும் வேலை செய்யாத நாட்கள் ஆகியவை தொழிலாளிக்கு கொடுக்கப்பட்ட மருத்துவ விடுப்பு நாட்களிலிருந்து கழிக்கப்பட வேண்டும். வேலையிட காய இழப்பீடு சட்டத்தின்கீழ் பொது விடுமுறைகளுக்கு மருத்துவமனை விடுமுறைகள் கொடுக்கப்படாவிட்டாலும், தொழிலாளர் சட்டத்தின்கீழ் பொது விடுமுறைகளுக்கு சம்பளம் கொடுக்கப்படுவது தொழிலாளியின் உரிமையாகும்.

**தங்களுடைய வழக்கமான சம்பளத்தை தொழிலாளிகள் பெறுகின்ற அதே தேதிக்கு பிற்போகாமல், முதலாளிகள் மருத்துவ விடுப்புக்கான சம்பளத்தை தொழிலாளிகளுக்கு கொடுக்க வேண்டும்.**

<u>நிரந்தர இயலாமைக்கான இழப்பீடு</u>

நிரந்தர இயலாமைக்கான இழப்பீட்டை கணக்கிடுதல்:

கொடுக்கப்படக்கூடிய இழப்பீடு = [தொழிலாளியின் மாதச் சம்பளம்] x [பெருக்கும் வகை*] x [சம்பள இழப்பின் %]

* பெருக்கும் வகைகளின் பட்டியல் 1 ஐ பார்க்கவும். இவை, இழப்பீடு பெறக்கூடிய மாதங்களின் எண்ணிக்கையாகும்.

- கொடுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய மற்றும் குறைந்த பட்ச இழப்பீட்டின் வரையறை பின்வருமாறு:
  ஆகக்கூடிய பட்சம் = $180,000 x [பணம் ஈட்டுவதில் % இழப்பு]
  குறைந்த பட்சம் = $60,000 x [பணம் ஈட்டுவதில் % இழப்பு]

- காயம் அடைந்த ஒரு தொழிலாளி நிரந்தர முழு இயலாமை அடைந்தால், இழப்பீட்டு தொகையிலிருந்து கூடுதலாக 25% கொடுக்கப்படும் ([பணம் ஈட்டுவதில் 100% இழப்பு]

மரணத்துக்கான இழப்பீடு

- கொடுக்கப்படக்கூடிய இழப்பீடு = [தொழிலாளியின் மாதச் சம்பளம்] x [பெருக்கல் வகை]

  மரணம் அடைந்த ஒரு தொழிலாளியை சார்ந்துள்ளோர்களுக்கு கொடுக்கப்படக்கூடிய இழப்பீட்டின் தொகை ஆகக்கூடிய மற்றும் குறைந்த பட்ச வரையறைக்குள் கீழ்கண்டவாறு அடங்கும்:

  ஆகக்கூடிய பட்சம் = $140,000
  குறைந்த பட்சம் = $47,000

## வேலையிட காய இழப்பீட்டு காப்புறுதி கட்டாயமா?

இந்தச் சட்டத்தின்கீழ் எழக்கூடிய இழப்புகளிலிருந்து தங்களுடைய பொருளாதார வெளிப்பாட்டை நிர்வகிப்பதற்கு முதலாளிகளுக்கு இலகுவான வழி உள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் புதிதாக காக்கப்பட்டுள்ள தொழிலாளிகள் தங்களுடைய முதலாளிகளிடமிருந்து காப்புறுதி வாங்க வேண்டும் என்பது கட்டாயமில்லை (அதாவது உடல் உழைப்பு அல்லாத வேலை மற்றும் $1,600 க்கு மேற்பட்ட மாதச் சம்பளம் பெறுகின்ற தொழிலாளிகளுக்கு இது கட்டாயமில்லை). இருப்பினும், முதலாளிகள் காப்புறுதி வாங்காவிட்டாலும் ஒரு ஒப்புக்கொள்ளத்தக்க கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் அவர்கள் இழப்பீடு கொடுக்க வேண்டும்.

1 ஏப்ரல் 2008 க்கு முன்பிருந்த சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு கட்டாய காப்புறுதி தேவை என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை (அதாவது உடல் உழைப்பு சார்ந்த வேலையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அவர்களுடைய சம்பளத்தின் அளவு எதுவாக இருப்பினும், அல்லது உடல் உழைப்பு சார்ந்த வேலையில் ஈடுபட்டு மாதச் சம்பளமாக $1,600 அல்லது குறைவாக பெறுபவர்களுக்கு இது பொருந்தும்). விதிவிலக்கு இருந்தாலேயொழிய, தொழிலாளிகளுக்கு முதலாளிகள் சட்டப்படி காப்புறுதி வாங்க வேண்டும்.

## யார், எப்பொழுது மற்றும் எவ்வாறு ஒரு விபத்தைப் பற்றி புகார் செய்வது?

முதலாளிகள் தங்களுடைய வேலை தொடர்பான விபத்துக்களை கண்டிப்பாக மனிதவளஅமைச்சுக்கு கீழே குறிப்பிட்டுள்ள கால வரையறைக்குள் தெரியப்படுத்த வேண்டும்.

| எதை புகார் செய்ய வேண்டும் | புகார் செய்ய வேண்டிய கால வரையறை |
|---|---|
| விபத்து ஒரு தொழிலாளிக்கு மரணம் விளைவித்திருந்தால் | விபத்து நடந்த 10 நாட்களுக்குள் |
| தொடர்ந்தாற்போல 3 நாட்களுக்கு ஒரு தொழிலாளியை வேலை செய்வதிலிருந்து விபத்து தடுத்திருந்தால், அல்லது கவனிப்பு அல்லது சிகிச்சைக்காக குறைந்தளவு 24 மணி நேரத்துக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் | விபத்து நடந்த 10 நாட்களுக்குள் |

**வேலை தொடர்பான விபத்தை அறிவிக்க தவறுவது ஒரு குற்றமாகும். முதல் குற்றத்துக்கு $5,000 வரையில் அபராதம், அடுத்தடுத்த குற்றங்களுக்கு $10,000 மற்றும்/அல்லது ஆறு மாதங்கள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.**

விபத்து பற்றிய புகாரை கீழ்க்கண்ட இணையதள முகவரியில் உள்ள ஐ-ரிப்போர்ட் (iReport) வாயிலாக முதலாளிகள் சமர்ப்பிக்கலாம்.

http://www.mom.gov.sg/iReport

## வேலையிட காய இழப்பீடு கோருவதற்கு சட்ட பிரதிநிதித்துவம் தேவையா?

பொதுவாக, வேலையிட காய இழப்பீடு கோருவதற்கு சட்ட பிரதிநிதித்துவம் தேவையில்லை. மனிதவள அமைச்சு அந்தக் கோரிக்கையை சம்பந்தப்பட்ட தரப்பினரோடு தொடர்பு கொண்டு செயலாற்றும். கோரிக்கை வழிமுறைகள் குறித்த அறிவுரை அல்லது உதவிக்கு மனிதவள அமைச்சை நாடலாம். இருப்பினும், இழப்பீட்டை வேலையிட காய இழப்பீடு சட்டத்தின் கீழ் கோருவதா அல்லது சிவில் சட்டத்தின் கீழ் கோருவதா என்பதை ஒருவர் பரிசீலிக்க விரும்பினால், அதற்காக அவர் சட்ட ஆலோசனை பெறலாம்.

# வேலையிட காய இழப்பீடு கோருவதற்கான வழிமுறை



வேலையிட காய இழப்பீடு பெறுவதற்கான பொது வழிமுறைகளை இந்தப் பகுதி விவரிக்கிறது.

## படி 1
## ஒரு விபத்தைப் பற்றி புகார் செய்தல்

- காயம் அடைந்த தொழிலாளி உடனடியாக விபத்தைப் பற்றி தனது முதலாளிக்கு தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், அது ஒரு மரணம் சார்ந்த விபத்தாக இருந்தாலே ஒழிய இழப்பீடு கொடுக்கப்படாது.
- அந்த விபத்தைக் குறித்து, மனிதவள அமைச்சுக்கும், அவரது காப்புறுதி நிறுவனம் அல்லது நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட கால வரையறைக்குள் முதலாளி அறிவிக்க வேண்டும்.

## படி 2
## வேலையிட காய இழப்பீடு கோரிக்கைக்கான ஆவணங்களை சமர்ப்பித்தல்

- பொது சட்டத்துக்குக் கீழ் இழப்பீடு கோராமல், வேலையிட காய இழப்பீட்டை ஒரு தொழிலாளி கோர விரும்பினால், மனிதவள அமைச்சுக்கு கோரிக்கை விடுப்பதற்கு அவருக்கு விபத்து நடந்த தினத்திலிருந்து ஒரு வருடம் வரையில் காலவரை உள்ளது.
- அந்த தொழிலாளி (அதாவது கோரிக்கை விடுப்பவர்), அவரது கோரிக்கை பரிசீலிக்கப்படும் காலத்தின் போது, மனிதவள அமைச்சுக்கும் அவரது முதலாளிக்கும் தனது விலாசத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து அறிவிக்க வேண்டும்.

## படி 3
## மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுதல்

- வேலையிட காய இழப்பீட்டுக்கு கோரிக்கை விடுப்பதற்கு தகுதியுடையவர்கள், அவர்கள் அனுபவிக்கின்ற காயத்தின் அளவை நிர்ணயிக்க ஒரு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்கும் பொருட்டு இது மேற்கொள்ளப்படுகிறது.

- சிகிச்சையளிக்கின்ற கிளினிக்/மருத்துவமனையால் மருத்துவ பரிசீலனை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக முதலாளிக்கு அல்லது கோரிக்கை விடுப்பவருக்கு ஒரு மருத்துவ பரிசோதனை அறிக்கையை மனிதவள அமைச்சு கொடுக்கும்.

- இந்த மருத்துவ பரிசோதனை அறிக்கை கிடைத்தவுடன், முதலாளி/கோரிக்கை விடுப்பவர் அதனை உடனடியாக சிகிச்சை அளிக்கின்ற கிளினிக்/ மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டும். அதோடு கிளினிக்/மருத்துவமனை கோரியுள்ள மருத்துவ பரிசோதனை அறிக்கைக்கான கட்டணங்களையும் அனுப்ப வேண்டும். அந்த மருத்துவ பரிசோதனை அறிக்கைக்கான கட்டணங்களை முதலாளி ஏற்க வேண்டும்.

- கிளினிக்/மருத்துவமனை உடனான மருத்துவ ஒப்பந்தத்தை கோரிக்கை விடுப்பவர் முழுமையாக பின்பற்ற வேண்டும். மேலும் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ சிகிச்சை மற்றும் மருத்துவ பரிசோதனைகளை பெற வேண்டும்.

- கோரிக்கை விடுப்பவர் வேலை செய்வதற்கு தகுதியில்லை என மருத்துவ ரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அவர் வேலை செய்யக் கூடாது. கோரிக்கை விடுப்பவர்/முதலாளிக்கு சந்தேகம் இருந்தால், சிகிச்சை அளிக்கின்ற மருத்துவரிடம் வேலை செய்வதற்கு கோரிக்கை விடுப்பவர் தகுதி பெற்றுள்ளாரா என ஆலோசனை கேட்க வேண்டும். வேலை செய்வதற்கு தகுதியில்லாத நிலையில் இருக்கின்ற போது வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டால், அவர் மனிதவள அமைச்சின் உதவியை நாடலாம்.

- கோரிக்கை விடுப்பவர் மருத்துவ பரிசோதனைக்கு 3 மாதங்களுக்கு தன்னை உட்படுத்த தவறினால், அவரது கோரிக்கை நிறுத்தி வைக்கப்படலாம். மேலும் இழப்பீடு கொடுக்கப்படாமலும் போகலாம்.

- கோரிக்கை விடுப்பவர், மருத்துவ சிகிச்சையின் தொடர்ச்சிக்காகவும் காயம் குணமடைவதற்காகவும் சிகிச்சையளிக்கின்ற கிளினிக்/மருத்துவமனையின் பரிந்துரை இல்லாமல் தேவையில்லாமல் மருத்துவர்களை மாற்றக்கூடாது.

- கிளினிக்/மருத்துவமனையை மாற்றினால், கோரிக்கை விடுப்பவர் அதனை தனது முதலாளி அல்லது மனிதவள அமைச்சுக்கு உடனடியாக தெரியப்படுத்த வேண்டும்.

## படி 4
## பெறவேண்டிய இழப்பீட்டை மதிப்பிடுதல்

- கிளினிக்/மருத்துவமனையிலிருந்து பூர்த்தி செய்யப்பட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கை கிடைத்தவுடன், மனிதவள அமைச்சின் ஆணையாளர் அதனை பரிசீலித்து கோரிக்கை விடுப்பவர், முதலாளி மற்றும் காப்புறுதி நிறுவனத்துக்கு ஒரு மதிப்பீட்டு அறிவிப்பு (NA) அனுப்புவார். கொடுப்பதற்கு இழப்பீடு இ ருந்தால், அந்தத் தொகை மதிப்பீட்டு அறிவிப்பில் பிரதிபலிக்கப்பட்டிருக்கும்.

- இந்த மதிப்பீட்டு அறிவிப்புக்கு யாராவது மறுப்பு தெரிவிக்க விரும்பினால், அது அனுப்பப்பட்ட 14 நாட்களுக்குள் தனது மறுப்பு பற்றிய அறிவிப்பை ஆணையாளருக்கு கொடுக்க வேண்டும். மறுப்பு தெரிவிக்கின்றவர், தனது

மறுப்புக்கான அடிப்படை காரணங்களை அதற்கான பாரத்தில் தெளிவாக தெரிவிக்க வேண்டும். இந்தக் காலவரைக்குப் பிறகு ஆணையாளருக்கு கிடைக்கின்ற எந்தவொரு மறுப்பும் ஏற்றுக்கொள்ளப்படாமல் போகலாம்.

## படி 5
## வேலையிட காய இழப்பீடு பெறுவதற்கு விண்ணப்பித்தல்

- வேலையிட காய இழப்பீடு தொகையை பெறுவதற்கு கோரிக்கை விடுப்பவர் முடிவு செய்வது (மதிப்பீட்டு அறிவுப்புக்கு மறுப்பு தெரிவிக்காமல் இருப்பதன் மூலமாக) மேலும் அதற்கு யாரும் எந்தவொரு மறுப்பு தெரிவிக்காமலும் இருந்தால், அந்த முதலாளி (அல்லது அவரது காப்புறுதி நிறுவனம்), மதிப்பீட்டு அறிவிப்பு சேவைக்குப் பிறகு 21 நாட்களுக்குள் அந்த இழப்பீடு தொகையை செலுத்த வேண்டும்.

- மதிப்பீட்டு அறிவிப்புக்கு மறுப்பு (கள்) இருந்தால், கோரிக்கை விடுப்பவர் 28 நாட்களுக்குள் (மதிப்பீட்டு அறிவிப்பின் சேவைக்குப் பிறகு) கீழே உள்ளவற்றுள் ஏதாவதொன்றை கோரிக்கை விடுப்பவர் தேர்ந்தெடுக்க வேண்டும்:

(அ), கோரிக்கையை பின்வாங்குவதன் மூலம், பொது சட்டத்தின் கீழ் முதலாளிக்கு எதிராக இழப்பீடு கோருதல்; அல்லது

(ஆ) வேலையிட காய இழப்பீட்டுக்கான கோரிக்கையை இதன்வழி விடுத்தல்:

(i) வேலையிட காய இழப்பீடு முறையின்படி (படி 6 பார்க்கவும்) தகராற்றை தீர்த்தல் வழிமுறைகளை பின்பற்றுதல்; அல்லது

(ii) ஏதாவது மறுப்பு இருந்தால் அதனை பின்வாங்குவதோடு மதிப்பீட்டு அறிவிப்பை ஏற்றுக்கொள்ளுதல். மதிப்பீட்டு அறிவிப்பை ஏற்றுக்கொண்டவுடன், அதற்கு எதிராக எந்தவொரு மறுப்பும் இல்லாமல் இருந்தால், முதலாளி (அல்லது அவரது காப்புறுதி நிறுவனம்) மதிப்பீட்டு அறிவிப்பின் சேவைக்குப் பிறகு 35 நாட்களுக்குள் இழப்பீடு தொகையை கொடுத்து விட வேண்டும் (அதாவது தனது கோரிக்கையை விடுப்பதற்கான கடைசி தேதிக்குப் பின் 7 நாட்களுக்குள்).

இந்தச் சட்டத்தின்கீழ் தனது கோரிக்கையை தொடர்வதென கோரிக்கை விடுப்பவர் முடிவு செய்தால், அவர் பொது சட்டத்தின்கீழ் தனது முதலாளி மீது வழக்கு தொடர்வதற்கான தேர்வை பொதுவாக பயன்படுத்த முடியாது.

## படி 6
## தகராற்றை தீர்த்தல் மற்றும் முற்றுப்பெறச்செய்தல்

- மறுப்புகளுக்கான தீர்வுக்கு உதவுவதற்கு மனிதவள அமைச்சு வழக்குக்கு முந்திய சந்திப்புகளை நடத்தும். இணக்கமான முறையில் தீர்க்கப்பட முடியாத எந்தவொரு மறுப்பும் தொழிலாளர் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்கப்படும்.

- இந்த மறுப்பு, நிரந்தர இயலாமைக்காக கொடுக்கப்பட்ட விழுக்காட்டைப் பற்றியதாக இருந்தால், அதனை வேலையிட காய இழப்பீட்டின் மருத்துவ வாரியத்துக்கு மனிதவள அமைச்சு பரிந்துரைக்கும். மருத்துவ பரிசீலனை குறித்த இதன் முடிவு இறுதியானதாக இருக்கும். மறுப்பு தெரிவிக்கின்றவர், மருத்துவ வாரியத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற மருத்துவ அறிக்கைக்கான கட்டணங்களையும் மற்றும் தேவைப்பட்ட சோதனைகளுக்கு உண்டான மற்ற செலவுகளையும் ஏற்க வேண்டும்.

- வழக்குக்கு முன்பான சந்திப்பில் எல்லா மறுப்புகளும் தீர்க்கப்பட்டு கோரிக்கை முடிவு செய்யப்பட்டதும், இழப்பீடு தொகையை **21 நாட்களுக்குள்** செலுத்தும்படி ஆணையாளர் உத்தரவிடுவார் (ஆணை பிறப்பித்த பிறகு).

- முதலாளி அல்லது காப்புறுதி நிறுவனம் நிர்ணயிக்கப்பட்ட தொகையை செலுத்த தவறினால், கோரிக்கை விடுத்தவர் அதனைக் குறித்து மனிதவள அமைச்சின் உதவியை நாடலாம்.

**இழப்பீட்டை செலுத்த தவறுவது ஒரு குற்றமாகும். அதற்கு $10,000 வரையிலான அபராதம் மற்றும்/அல்லது பன்னிரெண்டு மாதங்கள் வரைக்குமான சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.**

## வேலையிட காய இழப்பீட்டு வழிமுறை பற்றிய வரைபடம்

**படி 1: ஒரு விபத்தைப் பற்றி புகார் செய்தல்**

- முதலாளி, இணையத்தில் உள்ள ஐ-ரிப்போர்ட் வாயிலாக விபத்தைப் பற்றிய புகாரை தாக்கல் செய்தல் **(http://www.mom.gov.sg/iReport).**

↓

**படி 2: வேலையிட காய இழப்பீடு கோரிக்கைக்கான ஆவனங்களை சமர்ப்பித்தல்**

- வேலையிட காய இழப்பீடு சட்டத்தின் கீழ் தொழிலாளி இழப்பீடு கோர விரும்பினால், விபத்து நடந்த தேதியிலிருந்து 1 வருடத்துக்குள் தனது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

↓

**படி 3: மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுதல்**

- தனது காயத்தின் அளவை நிர்ணயிக்க தொழிலாளி மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுதல்.
- சிகிச்சையளிக்கின்ற கிளினிக்/மருத்துவமனை மனிதவள அமைச்சுக்கு மருத்துவ பரிசோதனை அறிக்கையை சமர்ப்பித்தல்.

↓

**படி 4: பெறவேண்டிய இழப்பீட்டை மதிப்பிடுதல்**

- பூர்த்தி செய்யப்பட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கை கிடைத்தவுடன், மனிதவள அமைச்சில் உள்ள ஆணையாளர் ஒரு மதிப்பீட்டு அறிவிப்பை (NA) அனுப்புவார். கொடுப்பதற்கு இழப்பீடு இருந்தால், அந்தத் தொகை மதிப்பீட்டு அறிவிப்பில் பிரதிபலிக்கப்பட்டிருக்கும்.
- ஏதாவது மறுப்புகள் இருந்தால் மதிப்பீட்டு அறிவிப்பு சேவை வழங்கிய 14 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும். மறுப்பு தெரிவிக்கின்றவர் தனது மறுப்புக்கான அடிப்படை காரணங்களை அதற்கான பாரத்தில் தெளிவாக தெரிவிக்க வேண்டும்.

↓

**படி 5: வேலையிட காய இழப்பீடு பெறுவதற்கு விண்ணப்பித்தல்**

- 14 நாட்களுக்குள் எந்தவொரு மறுப்பும் எழுப்பப்படாமல் இருந்தால், மதிப்பீட்டு அறிவிப்பு சேவைக்குப் பிறகு 21 நாட்களுக்குள் வேலையிட காய இழப்பீடு தொகை செலுத்தப்பட வேண்டும்.
- அப்படி மறுப்பு (கள்) எழுப்பப்படாமல் இருந்தால், மதிப்பீட்டு அறிவிப்பின் சேவைக்குப் பிறகு 28 நாட்களுக்குள், தனது இழப்பீட்டை பின்வாங்கி பொது சட்டத்தின் கீழ் வழக்கு தொடருவதா அல்லது வேலையிட காய இழப்பீடு கோரிக்கையை விடுப்பதா என முடிவெடுக்க வேண்டும்.

↓

**படி 6: தகராற்றை தீர்த்தல் மற்றும் முற்றுப்பெறச்செய்தல்**

- மறுப்புகளுக்கான தீர்வுக்கு உதவுவதற்கு மனிதவள அமைச்சு வழக்குக்கு முந்திய சந்திப்புகளை நடத்தும். இணக்கமான முறையில் தீர்க்கப்பட முடியாத எந்தவொரு மறுப்பும் தொழில் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்கப்படும்.

## குற்றங்கள் மற்றும் தண்டனைகள்

வேலையிட காய இழப்பீடு சட்டத்தின்படி உள்ள முக்கிய குற்றங்கள் மற்றும் அதற்கான தண்டனைகள் பின்வருமாறு:

| | குற்றங்கள் | கூடியபட்ச தண்டனை (அபராதம் மற்றும்/அல்லது சிறைத்தண்டனை) |
|---|---|---|
| 1. | இழப்பீடு அல்லது வட்டிப்பணத்தை செலுத்த தவறுதல் | $10,000, மற்றும்/அல்லது 12 மாதங்கள் |
| 2. | மோசடியான கோரிக்கை செய்தல் | $15,000, மற்றும்/அல்லது 12 மாதங்கள் |
| 3. | பொய்யான தகவல் அல்லது வாக்குமூலம் கொடுத்தல் | $5,000, மற்றும்/அல்லது 6 மாதங்கள் |
| 4. | ஆணையாளர் அல்லது புலன் விசாரணை அதிகாரியின் பணிக்கு தடங்கல் ஏற்படுத்துதல் அல்லது கால தாமதம் ஏற்படச் செய்தல் | $5,000, மற்றும்/அல்லது 6 மாதங்கள் |
| 5. | குற்றத்துக்கு உடந்தையாக இருப்பது | குற்றத்தை செய்தால் கிடைக்கின்ற அதே தண்டனை |
| 6. | காப்புறுதியின் செலவை குறைப்பதற்காக சம்பளத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் பணத்தை எடுத்தல் | $5,000, மற்றும்/அல்லது 6 மாதங்கள் |
| 7. | ஒரு தொழிலாளிக்கு போதுமான அளவு காப்புறுதி எடுக்கத் தவறுதல் | $10,000, மற்றும்/அல்லது 12 மாதங்கள் |
| 8. | ஒரு விபத்தைப் பற்றி புகார் செய்ய தவறுதல் | முதல் குற்றத்துக்கு $5,000, இரண்டாவது அல்லது அடுத்தடுத்த குற்றத்துக்கு, $10,000 மற்றும்/அல்லது 6 மாதங்கள் |

## பின் இணைப்பு: பட்டியல் 1 - பெருக்கும் வகைகளின் பட்டியல்

| அடுத்த பிறந்த நாளில் தொழிலாளியின் வயது | நிரந்தரமாக வேலை செய்ய முடியாத நிலை | மரணம் | அடுத்த பிறந்த நாளில் தொழிலாளியின் வயது | நிரந்தமாக வேலை செய்ய முடியாத நிலை | மரணம் |
|---|---|---|---|---|---|
| 14 | 181 | 136 | 40 | 144 | 108 |
| 15 | 180 | 135 | 41 | 142 | 107 |
| 16 | 179 | 135 | 42 | 140 | 106 |
| 17 | 178 | 134 | 43 | 138 | 105 |
| 18 | 178 | 134 | 44 | 136 | 104 |
| 19 | 177 | 133 | 45 | 134 | 103 |
| 20 | 176 | 132 | 46 | 132 | 102 |
| 21 | 175 | 132 | 47 | 130 | 101 |
| 22 | 174 | 131 | 48 | 128 | 100 |
| 23 | 173 | 130 | 49 | 126 | 98 |
| 24 | 172 | 129 | 50 | 124 | 96 |
| 25 | 170 | 128 | 51 | 122 | 94 |
| 26 | 169 | 127 | 52 | 120 | 92 |
| 27 | 168 | 127 | 53 | 118 | 90 |
| 28 | 167 | 125 | 54 | 116 | 88 |
| 29 | 165 | 124 | 55 | 114 | 86 |
| 30 | 164 | 123 | 56 | 111 | 84 |
| 31 | 162 | 122 | 57 | 108 | 82 |
| 32 | 160 | 121 | 58 | 105 | 80 |
| 33 | 159 | 120 | 59 | 102 | 78 |
| 34 | 157 | 118 | 60 | 99 | 75 |
| 35 | 155 | 117 | 61 | 96 | 72 |
| 36 | 153 | 115 | 62 | 92 | 68 |
| 37 | 151 | 114 | 63 | 87 | 63 |
| 38 | 149 | 112 | 64 | 82 | 58 |
| 39 | 146 | 110 | 65 | 77 | 53 |
| | | | 66+ | 72 | 48 |

**மனிதவள அமைச்சு மற்றும் வேலையிட பாதுகாப்பு மேலும் சுகாதார ஆலோசனை செயற்குழுவால் ஜனவரி 2008 ல் அச்சடிக்கப்பட்டது.**

இந்த வழிகாட்டி நூலில் கொடுக்கப்பட்டுள்ள தகவல் அச்சடிக்கப்பட்ட வேளையில் சரியானதே. வேலையிட காய இழப்பீடு சட்டத்தின் கீழ், முதலாளிகள் மற்றும் தொழிலாளிகள் தங்களது உரிமைகள் மற்றும் பொறுப்புகளை அறிந்துக் கொள்ள செய்வதே இந்தக் குறிப்புகளின் நோக்கமாகும். இது ஒரு வழிகாட்டியாக இருப்பதால், இந்தக் கையேட்டுக்கு எந்தவித சட்ட அடிப்படையும் கிடையாது. சந்தேகங்களுக்கு வேலையிட காய இழப்பீடு சட்டத்தை மேற்கோளாகக் கொள்ளவும்.

மின்னஞ்சல்:

mom_oshd@mom.gov.sg

contact@wshc.gov.sg